https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

16th APRIL 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 23







# வேட்பாளர் போட்டி: இப்போதே ஆரம்பம்

ரணிலா?

அரசு உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைத்துவிட்டு 2024 ஆம் ஆண்டு இறுதியில் இடம்பெறப் போகும் ஜனாதிபதி

02



பஸிலா?



## விமலுக்கு தொடர் அழைப்பு

விமல் வீரவன்ஸ–உதய கம்மன்பிள ஆகியோருக்கு மஹிந்த தரப்பு தொடர்ச்சியாக அழைப்பு விடுத்து வருவதாக விமல் வீரவன்ஸ கூறியுள்ளார்.

மஹிந்த தரப்புடன் வந்து இணையுமாறு அமைச்சர் டிரான் அலஸின் ஊடாகப் பல தடவைகள்

02



## நாமலை புறக்கணிக்கும் எம்பிக்கள்


மொட்டு கட்சியைப் பலப்படுத்துவதற்காக நாமல் ராஜபக்ஸவும் ஜோன்சன் பெர்னாண்டோவும் களத்தில் குதித்துள்ளனர்.

இதற்காக அவர்கள் மாவட்ட மட்டத்தில் கூட்டங்களை நடத்தி வருகின்றனர்.இதில் பரிதாபம் என்னவென்றால் அந்தந்த மாவட்டங்களின் எம்பிக்களே அந்தக் கூட்டங்களை புறக்கணிப்பதுதான்.

மாத்தளையில் இடம்பெற்ற கூட்டத்தில் ஜனக பண்டார,ப்ரமித்த பண்டார,ரோஹன திஸாநாயக்க ஆகிய எம்பிக்கள் கலந்துகொள்ளவில்லை.

அனுராதபுரத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க கலந்துகொள்ளவில்லை.

02




## தேசிய அரசு உருவாக்கம்: கட்சிகளுக்கு அழைப்பு: ஜனாதிபதி ஏற்பாடு

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை நாடாளுமன்றில் சமர்பித்ததன் பின் புதிய அமைச்சரவையை நிறுவுவதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என்று தெரிய வருகிறது.

தேசிய அரசு ஒன்றை அமைப்பதுதான் ஜனாதிபதியின் திட்டமெனத் தெரிவிக்கப்படுகிறது.

அதற்கமைய அவர் ஐஆகு உடனான ஒப்பந்தத்தை நாடாளுமன்றில் சமர்பித்ததன் பின் கட்சிகளுக்கு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுக்கவுள்ளார்.

02



மாமாவின் வழியில் மருமகன்...

04



முன்னேற்றப் பாதையில் East Star Handlooms...

09



புதுச்சுடர்
www.puthusudar.lk
2023 APRIL 16 - SUNDAY

# புதுக் குழப்பம்

உள்ளூராட்சி சபைத் தேர்தல் இடம்பெறாது என்பது உறுதியாகிவிட்டது.ஒரு தடவை தேர்தலை அறிவித்து-பணம் கிடைக்கவில்லை என்று தெரிவித்து-அதை ஒத்திப்போட்டு-மீண்டும் தேர்தலை அறிவித்து-இப்போது மீண்டும் ஒத்திப்போட்டு- என இப்படிப் போகிறது தேர்தல் விவகாரம்.

தேர்தல் நடக்காது என்பது எல்லோருக்கும் தெரியும். அது ஏன் நடக்காது என்பதும் தெரியும்.இருந்தும்கூடஅரசை மேலும் மக்களிடம் இருந்து தூரப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாக இதைப் பயன்படுத்தி தேர்தலை கேட்டு போராடி வருகின்றன எதிர்க்கட்சிகள்.

2024 இல் ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும்.அதற்கு முன் எந்தத் தேர்தலையும் நடத்துவதில்லை என்பதுதான் ஜனாதிபதியின் நிலைப்பாடு.அதில் தான் போட்டியிட வேண்டும்வெல்ல வேண்டும் என்ற நோக்கில் செயற்பட்டு வருகிறார் அவர்.

மொட்டு கட்சியும் ஐக்கிய தேசிய கட்சியும் ஒன்றிணைந்து ரணிலையே பொது வேட்பாளராக நிறுத்துவதற்கு இணக்கம் கண்டுள்ளது.ஆனால் ,ரணிலுக்கு இப்போது பஸில் ராஜபக்ஸ வின் வடிவில் புதுப் பிரச்சினை ஒன்று தோன்றியுள்ளது.அதுதான் அவரும் வேட்பாளராக இறங்குவதற்கான முயற்சி செய்கின்றமை.

ஆம்.. பஸில் ராஜபக்ஸ தரப்பு இப்படியொரு காயை நகர்த்தத் தொடங்கியுள்ளது. பொதுவாக மொட்டுக்குள் ரணில் தரப்பு,நாமல் தரப்பு,பஸில் தரப்பு என்று மூன்று தரப்புக்கள் இயங்கி வருகின்றன.

மொட்டில் உள்ள சிலர்,ஏனைய கட்சிகளில் இருந்து அரசுடன் இணைந்துகொண்ட சிலர் என ஒரு குழுவினர் ரணில் ஆதரவு தரப்பாக இருக்கின்றனர்.மொட்டின் இளம் எம்பிக்கள் நாமல் ஆதரவு தரப்பினர். சீனியர்கள் பஸில் அணியினர்.

அடுத்த தடவையும் ரணில் ஜனாதிபதியாக வருவது இந்த பஸில் அணியினருக்கு விருப்பமில்லை. பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ரணிலுக்கு ஜனாதிபதி என்றொரு வாய்ப்பை வழங்கி இருக்கிறோம். ஓர் ஆசனத்தைக்கூட வெல்லமுடியாத அவருக்கு ஜனாதிபதி என்பது பெரிய விடயம்-மிகப் பெரிய விடயம்.அடுத்த முறையும் அவரே ஜனாதிபதியாக இருப்பதற்கு ஆசைப்படக்கூடாது.

அது எமது கட்சிக்குள்ள உரிமை. கட்சிக்கே கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர் பஸில் தரப்பினர்.

ஆகவே,பஸிலையே இந்த முறை ஜனாதிபதியாக்க வேண்டும் என்பதுதான் அவர்களின் நிலைப்பாடு.

இந்தப் பிரச்சினை இப்போதுதான் மெல்ல மெல்ல துளிர் விடத் தொடங்கியுள்ளது. இது விரைவில் பெரும் பிரச்சினையாக மாறுவதற்கு வாய்ப்புண்டு.

கோத்தா ஓடிப் போனதன் பிறகு மொட்டுக் கட்சியில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு யாருமில்லை.மஹிந்தவுக்கு மக்கள் செல்வாக்கு இருக்கின்றபோதிலும், அரசமைப்பின்படி அவரால் போட்டியிட முடியாது.நாமலுக்கு இன்னும் வயதிருக்கிறது.சமல் ராஜபக்ஸவுக்கு மக்கள் செல்வாக்கு இல்லை.

இதன் காரணமாக மொட்டில் இப்போது இருக்கின்ற-வேட்பாளருக்குத் தகுதி உடைய ஒருவர் என்றால் அவர் பஸில் மட்டும்தான் என்பதுதான் பஸில் தரப்பின் வாதம்.ஆகவே,அவர்தான் இந்தமுறை போட்டியிட வேண்டும் என்று கூறி களமிறங்கியுள்ளார்கள்.

இது ரணிலுக்குப் பெரும் தலையிடியாக உள்ளது.இதை முறியடிப்பதற்காக ரணில் பல வியூகங்களை வகுப்பார் என்பதில் சந்தேகமில்லை.ஏனைய கட்சிகளில் இருந்து எம்பிக்களை வளைத்துப் போட முயற்சிப்பதும் அந்த வியூகத்தில் ஒன்றுதான் என்று சொல்லலாம்.

பசிலைப் பொறுத்தவரை நீண்ட காலமாக ஜனாதிபதி கனவுடன் இருப்பவர்.2019 தேர்தலில் அவர் போட்டியிடும் திட்டத்தில் இருந்தார். ஆனால்,அப்போதிருந்த பிரச்சினை பாதுகாப்போடு சம்பந்தப்பட்டதாக இருந்ததால் கோத்தாதான் அதற்குப் பொருத்தமானவர் என்ற கருத்து மக்களிடம் பரப்பப்பட்டிருந்தது.இதனால் பசில் அதில் இருந்து ஒதுங்கினார்.2024 இல் போட்டியிடும் திட்டத்தை வகுத்தார்.

நாட்டின் நிலைமை தலைகீழாக மாறியதால் திட்டமெல்லாம் தவிடுபொடியானது.ஆனால்,இப்போது நிலைமை சற்று முன்னேறி வருவதால் அதைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்தித் தனது திட்டத்தை நிறைவேற்ற முற்படுகிறார் என்றே தெரிகிறது.

ஆகவே,மொட்டு இனி பசில் தரப்பு என்றும் ரணில் தரப்பு என்றும் கூடாக இருக்கப் போவதைக் காணலாம்.


## இன்று கொழும்பு வருவோருக்கு முக்கிய அறிவிப்பு

புத்தாண்டை முன்னிட்டு கிராமங்களுக்கு சென்ற பலர் அதிவேக வீதிகளை பயன்படுத்தி இன்று (16) கொழும்பு திரும்ப உள்ளனர்.எனினும் இந்த ஆண்டு அதிவேக வீதிகளில் கவனக்குறைவாக வாகனம் செலுத்தியதால் 856 விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

அதிவேக வீதிகளின் நாளுக்கு நாள் பயன்பாடு அதிகரித்து வருவதால், அந்த சாலைகளில் நாளுக்கு நாள் விபத்துகள் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகளின்படி, 2022ஆம் ஆண்டில் மாத்திரம் இடம்பெற்ற அதிவேக விபத்துக்களின் எண்ணிக்கை 1,675 ஆகும்.

இந்த விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர் மற்றும் 25 பேர் படுகாயமடைந்தனர். நிலைமை இப்படி இருக்கும்போது, இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரையிலான மூன்றரை மாதங்களில் மட்டும் நிகழ்ந்த அதிவேக விபத்துகளின் எண்ணிக்கை 856 ஆகும்.

இதில் 6 பேர் உயிரிழந்தனர், 14 பேர் படுகாயமடைந்தனர்.வாகனத்தின் நிலை குறித்து சாரதிக்கு போதிய புரிதல் இல்லாததே நெடுஞ்சாலை விபத்துக்கள் அதிகரிப்பதற்கு காரணம் என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் சர்தா வீரகோன் தெரிவித்துள்ளார்.




### வேட்பாளர்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

தேர்தலுக்கான வேலையில் இப்போதே இறங்கி இருப்பதை அவதானிக்க முடிகிறது.

அரசின் பொருளாதார நகர்வுகள் உள்ளிட்ட பல விடயங்கள் தேர்தலுக்கான ஏற்பாட்டையும்-அந்தத் தேர்தலை எப்படியாவது வென்றுவிட வேண்டுமென்ற அரசின் உணர்வையும் வெளிப்படுத்தி நிற்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

அதில் மொட்டு-ஐக்கிய தேசிய கட்சிகளின் பொது வேட்பாளராகத் தான் இறக்கப்பட்டு வெல்வதற்கான வியூகத்தை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வகுத்து வருகிறார்.இரு கட்சிகளும் கொள்கையளவில் அதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

இருந்தும், ரணிலுக்குத் தலையிடி கொடுக்கும்வகையில்,புதுப் பிரச்சினை ஒன்று இப்போது மொட்டுக்குள் எழத் தொடங்கியுள்ளது.அதுதான் வேட்பாளர் போட்டி.

பொது வேட்பாளராக ரணிலை களமிறக்குவதற்கு மொட்டு கட்சி இப்போதுவரை இணங்கியுள்ளபோதிலும், மொட்டுக்குள் இருக்கின்ற பஸில் ராஜபக்ஸவுக்கு ஆதரவான தரப்பு பஸிலையே வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்ற ஒரு கோஷத்தை முன்வைக்கத் தொடங்கியுள்ளது.

அவரது அமெரிக்கா பிரஜா உரிமையை இப்போதே ரத்துச் செய்து அதற்காகத் தயாராகுமாறு அந்தத் தரப்பு பஸி லுக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கியுள்ளதாக அறிய முடிகிறது.

இந்தப் பிரச்சினை இன்னும் சில நாட்களில் மெல்ல மெல்ல வளர்ந்து கட்சிக்குள் பெரும் பூதாகாரத்தை ஏற்படுத்தும் என்று அறிய முடிகிறது.

### நாமலை...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

கம்பஹா மாவட்டத்திற்கான கூட்டம் பியகமவில் இடம்பெற்றபோது கட்சியின் மாவட்டத் தலைவர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கலந்துகொள்ளவில்லை.

### விமலுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் இப்போதும் இந்த அழைப்பு தொடர்கிறது என்றும் அவர் மேலும் கூறினார்.

தாம் நிலையான கொள்கையில் இருப்பதால் அந்த அழைப்பை நிராகரித்து வருவதாக அவர் சொன்னார்.

### தேசிய...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

அந்த அழைப்பை ஏற்று அரசுடன் இணையும் கட்சிகளை வைத்து தேசிய அரசை உருவாக்கவுள்ளார்.

அவ்வாறு இணைந்தாலும்கூட கட்சிகளின் விருப்பத்திற்கு ஏற்ப அமைச்சுப் பதவிகள் வழங்கப்படமாட்டாது என்றும் எவ்வாறு வழங்குவதென்று தானே முடிவெடுப்பேன் என்றும் சில நாட்களுக்கு முன் ஐக்கிய மக்கள் சக்தி எம்பிக்கள் சிலருடன் இடம்பெற்ற சந்திப்பின்போது ஜனாதிபதி கூறினார்.





# எல்லாவற்றையும் விற்று நடுவீதியில் நிற்கப் போகிறோம்

நாட்டுக்குச் சொந்தமான நிறுவனங்கள்-வளங்கள் அனைத்தையும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்று இறுதியில் நாம் எதுவும் இல்லாமல் நடுவீதியில் நிற்கப் போகிறோம் என ஜேவிபி உறுப்பினர் வசந்த சமரசிங்க கூறினார்.அவர் மேலும் கூறுகையில்

நாட்டின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நாட்டில் இருக்கின்ற எதையாவது விற்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறுகிறார்.

இதைத்தான் ரணிலின் மாமா ஜே.ஆரும் செய்தார்.1978 இல் அரச நிறுவனங்களை மறுசீரமைத்தல் என்ற பெயரில் பல நிறுவனங்களை விற்றார்.அதையே இப்போது மருமகனும் செய்கிறார்.

இப்படியே எல்லாவற்றையும் விற்று விற்று இருப்பதற்கு இடம்கூட இல்லாமல் வீதிக்கு வரப்போகிறோம்.

அதிக வளங்கள் உள்ள நாடு இது.நல்ல திறமையான மனித வளங்கள் அதிகம் உள்ளன.எவற்றையும் அரசு பயன்படுத்தாமல் எல்லாவற்றையும் விற்பதில்தான் குறியாக இருக்கிறது.

மறுபுறம்,பாடசாலைகளில் 40 ஆயிரம் ஆசிரியர்களின் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.வைத்தியசாலைகளிலும் இதே நிலைமை.விசேட வைத்திய நிபுணர்கள் இன்மையால் அனுராதபுர பொது வைத்தியசாலையில் சிறுவர் பிரிவு மூடப்பட்டுள்ளது.


ராஜரட்ட பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்கள் இல்லாததால் அங்கும் கற்பிப்பதில் பிரச்சினை.இப்படியே நாட்டின் பல்வேறு துறைகள் சிக்கி இருக்கின்றன.

மக்கள் மூன்று நேரமும் சாப்பிட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.இவ்வாறு நாட்டின் சொத்துக்களை விற்பதன் மூலம் நாடு மேலும் சிக்கலுக்குள் விழுமே தவிர முன்னேறாது.

நாட்டை பொருளாதாரரீதியாக வீழ்த்தியது மக்கள் அல்ல.ஆட்சியாளர்கள். பெற்றோலியத்தை இந்த நிலைக்குக் கொண்டுவந்தது மக்கள் அல்ல. ஆட்சியாளர்கள்.இப்படி எல்லா வீழ்ச்சிக்கும் அரசியல்வாதிகளே காரணம்.

இதுவரை விற்கப்பட்ட நிறுவனங்களால் அரசுக்கு-இந்த நாட்டு மக்களுக்கு ஏற்பட்ட என்ன? என்றார்.

# அரசு எந்த நிறுவனத்தையும் விற்காது



அரசின் எந்தச் சொத்துக்களையும் அரசு விற்காது.காணியின்-நிறுவனங்களின் உரிமையை வைத்துக்கொண்டு குத்தகை அடிப்படையில் தனியார் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும் என ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் எம்பி ஆசுமாரசிங்க கூறினார்.அவர் மேலும் கூறுகையில்,

எந்தச் சொத்துக்களையும் அரசு விற்காது.காணியின்-நிறுவனங்களின் உரிமையை வைத்துக்கொண்டு குத்தகை அடிப்படையில் தனியார் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும்.

52 அரச நிறுவனங்கள் 2022 இல் அடைந்த நஷ்டம் 932 பில்லியனாகும்.டெலிகொம் நிறுவனம் 163 வயதைக் கொண்டது.இருந்தும், தொலைபேசி இணைப்பு ஒன்றைப் பெறுவதற்காக அன்று கடும் பாடுபட்டோம்.

இன்று அதன் பங்குகள் ஜப்பான் நிறுவனத்திடம் கொடுக்கப்பட்டதால் அந்தப் பிரச்சினைகள் இல்லை.இலாபமீட்டும் நிறுவனமாக மாறியுள்ளது.சேவைகளும் தரம்.

இருந்தும்,அந்த நிறுவனத்திடம் இருக்கின்ற வளங்களுக்கு ஏற்ப இன்னும் இலாபமீட்ட முடியும்.அதற்கு ஏற்ப அதை இன்னும் மறுசீரமைக்க வேண்டும்.

குறைந்த ஊழியர்களை கொண்ட டயலொக் நிறுவனம் அதிக இலாபம் பெறுகிறது.கூடிய ஊழியர்களைக் கொண்ட டெலிகொம் அதைவிடக் குறைந்த இலாபத்தையே பெறுகிறது.

அதிக இலாபமீட்டும் நிறுவனமாக டெலிகொம்மை மாற்ற வேண்டும் என்றால் தனியார் நிறுவனங்களுடன் சேர்ந்து மறுசீரமைப்புச் செய்ய வேண்டும்.

எரிபொருள் விற்பனை மூன்று நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.அந்த நிறுவனங்கள் ஒரு வருடத்துக்குள் சம்பாதிக்கும் இலாபத்தை நாட்டுக்கு வெளியே கொண்டு செல்ல முடியாது. அந்த இலாபம் மீண்டும் இலங்கைக்குள்ளேயே முதலீடு செய்யப்பட வேண்டும் என்றே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இதனால் அடுத்த வருடம் அந்த நிறுவனங்களால் டொலர் வெளியே போகாது.என்றார்.

# ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் இயங்கும் SEDR திட்டம்

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியின் கீழ் இயங்கும் பிணக்கைத் தீர்ப்பதற்கான திட்டமானது (ளுநுனுசு), நாட்டில் மாற்றுவழி பிணக்குத் தீர்வு (ADR) பொறிமுறைகளை வலுப்படுத்த "நியாயமான மாற்றுவழியை வலுப்படுத்தல்" என்ற தலைப்பிலான கொள்கை விளக்கத்தை வெளியிட்டது.




கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் கவுன்சில் நூலகத்தில் நடைபெற்ற இந்த வெளியீட்டு நிகழ்வில், கௌரவ. நீதியமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ, இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான (இடைக்கால) தலைவர் பியட்ரிஸ் புஸ்ஸி, மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் செயலாளர் பிரியநாத் பெரேரா, மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் தலைவர் கௌரவ. நீதியரசர் யாப்பா, மற்றும் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்கள், உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.

சபையில் கருத்து தெரிவித்த கௌரவ. கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ "பிணக்குகளை வினைத்திறனாக தீர்ப்பதற்கு தேவையான சட்ட, கொள்கை மற்றும் நிறுவன கட்டமைப்பை உருவாக்குவதை உறுதிப்படுத்துவது அமைச்சின் முக்கிய பணிகளில் ஒன்றாகும்.

மத்தியஸ்தம் உட்பட மாற்றுவழி பிணக்குத் தீர்வும் இதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மாற்றுவழி பிணக்குத் தீர்வு பொறிமுறைகளின் செயல்திறன் குறித்து, குறிப்பாக மத்தியஸ்தம் பற்றி, சமூகம் மற்றும் பங்குதாரர்களிடையே பல்வேறு கருத்துக்கள் உள்ளன.

இதற்கிடையில், இலங்கையில் பிணக்குத் தீர்வு செயல்முறைகளை மேம்படுத்த அமைச்சகம் பல சீர்திருத்தங்களைத் தொடங்கியுள்ளது. அதன்படி, மாற்றுவழி பிணக்குத் தீர்வு பொறிமுறைகள் தொடர்பான ஆதார அடிப்படையிலான முடிவுகள் ஏடுப்பதை எளிதாக்குவதற்கு இது போன்ற ஆய்வுகளின் முக்கியத்துவத்தை அமைச்சகம் எடுத்துக்காட்டுகிறது. இந்த வெற்றிகரமான முன்முயற்சிக்கு அமைச்சகம் SEDR திட்டத்திற்கு வாழ்த்துக்களை தெரிவிக்க விரும்புகிறது."என்றார்.



# அரச நிறுவனங்களை தனியார் நிறுவனங்களுக்கு விற்பது தப்பில்லை

நாம் உலகத்தோடு சேர்ந்து போக வேண்டும்.இப்படியே இருந்தால் முன்னேற முடியாது. அரச நிறுவனங்களை தனியார் நிறுவனங்களுக்கு விற்பது தப்பில்லை அதற்காக இலாபம் அடைகின்ற எல்லாவற்றையும் அவசரப்பட்டு விற்க முடியாது. அப்படிச் செய்து எப்படி அரசின் இலாபத்தை அதிகரிப்பது?என ஐக்கிய மக்கள் சக்தி எம்பி அஜித் மானபெரும கூறினார்.அவர் மேலும் கூறுகையில்

இலாபம் பெரும் அரச நிறுவனங்களை விற்பதை எம்மால் ஏற்க முடியாது. தேவையில்லாத சர்வதேச கடன்களை பெற்று எம்மால் தாங்கிக்கொள்ள முடியாத வேலைத் திட்டங்களை செய்தனர்.அதன் பிரதிபலன்களை நாம் இன்று அனுபவிக்கிறோம்.

இதனால் உண்டான கடன்களை அடைப்பதற்காக நாட்டின் வளங்களை-இலாபமீட்டும் நிறுவனங்களை விற்பதை ஏற்க முடியாது.

அதேவேளை,தனியார் இல்லாமல் எல்லா பிரச்சினைகளையும் அரசால் செய்ய முடியாது.முன்பு தொலைபேசி பழுதானால் அதைத் திருத்துவதற்காக டெலிகாம் ஊழியர்களின் பின்னால் அலைய வேண்டும்.இப்போது அது தனியாருக்கு கொடுத்துள்ளதால் அந்தப் பிரச்சினை இல்லை.

சிறிலங்கன் எயார் லைன் நிறுவனம் எமிரேட்ஸ் நிறுவனத்துடன் இணைந்து செயற்படும்போது இலாபம் கிடைத்தது.பின்னர் சிறிலங்கனை மஹிந்த அரச உடமையாக்கியதும் கோடிக்கணக்கில் நஷ்டம் ஏற்பட்டு வருகிறது.

உலகத்தோடு சேர்ந்து போக வேண்டும்.இப்படியே இருந்தால் முன்னேற முடியாது. அதற்காக இலாபம் அடைகின்ற எல்லாவற்றையும் அவசரப்பட்டு விற்க முடியாது.அப்படிச் செய்து எப்படி அரசின் இலாபத்தை அதிகரிப்பது?

அஜித் நிவார்ட் கப்ரால் தங்கத்தை விற்றதுபோல் விற்க முடியாது.நன்றாக ஆய்வு செய்த பின்தான் விற்க வேண்டும்.

அரசு வர்த்தக செயற்பாடுகளில் இருந்து விலக வேண்டும். அன்று அரசின் கையில் இருந்தபோது டெலிகொம் இலாபமடையவில்லை. தனியாருக்கு கொடுத்ததன் பின்தான் இலாபமீட்டியது.

இப்போது இருக்கின்ற முறைமைக்கு ஏற்பவே நாம் பயணிக்க வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மக்களை எப்படி வாழவைப்பது என்று யோசிக்க வேண்டும். அதனால்தான் ஐஅக இடம் செல்ல வேண்டும் என்று நாம் ஆரம்பத்தில் இருந்தே கூறி வந்தோம்.நாடு வங்குரோத்து அடையும் முன்பே போகச் சொன்னோம்.ஆனால்,நாம் வங்குரோத்து அடைந்த பின்பே சென்றோம்.

நாடு வீழ்ந்து கிடக்கும் நேரத்தில் பஸ்களுக்கு தீ வைக்க முடியாது.ட்ரான்ஸ்போமருக்கு தீ வைக்க முடியாது.

அப்படிச் செய்தால் நாடு இன்னும் சிக்கலில்தான் விழும் என்றார்.



# ரணிலுக்கு வந்தால் இரத்தம்...

# மாமாவின் வழியில் மருமகன்...

# சந்திரிகாவுக்கு வந்தால் தக்காளி சட்னி...

**77 இல் தேர்தல் இடம்பெறுகிறது.அடுத்த தேர்தல் 1983 இல் இடம்பெற வேண்டும். ஆனால்,மேலும் 6 வருடங்களுக்கு நாடாளுமன்றத்தின் ஆயுட் காலத்தை நீடிப்பதற்கு முடிவெடுக்கிறார் ஜே.ஆர். 1982 இல் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி-அதில் வெற்றி பெற்று 6 வருடங்களுக்கு நாடாளுமன்த்தின் ஆயுட்காலத்தை நீடிக்கிறார்.அதன் படி அடுத்த தேர்தல் 1989 இல். சிறிமா மேலதிகமாக 2 வருடங்களுக்கு நாடாளுமன்றத்தின் ஆயுட்காலத்தை அதிகரித்தமைக்கு இவ்வளவு கூத்துக் காட்டிய ஜே.ஆர்.அவரது ஆட்சியில் 6 வருடங்கள் நீடிக்கிறார்.**



உள்ளூராட்சி சபைத் தேர்தல் காலவரையறை இன்றி ஒத்திப்போடப்பட்டுள்ளது.இதற்கு சொல்லப்படுகின்ற காரணம் வழமைபோல் ““பணமில்லை““.

அரசியல்ரீதியில் தமக்கு இலாபம் இல்லாத சூழ்நிலை எழும்போது அரசு இவ்வாறு ஒத்திப்போடுவது சாதாரண விடயம். வரலாற்றில் இவ்வாறு இடம்பெற்ற பல சந்தர்ப்பங்கள் உள்ளன.

சிறிமா அம்மையாரின் ஆட்சியில்-ஜே.ஆரின் ஆட்சியில்-சந்திரிகாவின் ஆட்சியில் என பல ஆட்சியில் தேர்தலை ஒத்திப்போட்ட-தேர்தலை நடத்தாது பதவிக் காலத்தை நீடித்த சம்பவங்கள் பல உள்ளன.

ஆனால்,ஆட்சியில் உள்ளவர்கள் அவ்வாறு செய்யும்போது எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் தங்களை முழுமையான ஜனநாயகவாதியாகக் காட்டிக்கொண்டு அதற்கு எதிராகப் போராடுகின்றனர்.அவர்கள் ஆட்சிக்கு வரும்போது அதே பிழையை-ஜனநாயக மீறலைச் செய்கின்றனர்.

அப்படித்தான் இப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும்.

எதிர்க்கட்சியில் இருக்கும்போது அவரைப்போல் ஜனநாயகவாதி யாருமில்லை. ஆட்சிக்கு வந்ததும் அதற்கு மாறாக செயற்படுவதைக் காணலாம்.

கொஞ்சம் பின்னுக்குச் சென்று வரலாற்றைச் சற்றுத் தட்டிப் பார்ப்போம்.

## சிறிமா பார்த்த வேலையால்...

1970 ஆம் ஆண்டு முதன் முதலாக ஆட்சிக்கு வருகிறார் சிறிமாவோ பண்டாரநாயக்க.ஆசியாவின் முதல் பெண் பிரதமராக...

70 இல் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவருக்குக் கிடைக்கிறது.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற வேண்டும் 1975 இல்...

ஆனால்,சிறிமா நாடாளுமன்ற பதவிக் காலத்தை இரண்டு வருடங்களுக்கு நீடிக்கிறார்.அதாவது,1977 இல்தான் தேர்தல் என்று அறிவிக்கிறார்.

அப்போது எதிர்கட்சித் தலைவராக இருந்தவர் ஜே.ஆர்.ஜயவர்தன.அவர் இதைக் கடுமையாக எதிர்க்கிறார்.

சிறிமாவோ அவ்வாறு நீடித்தமைக்கான காரணத்தைச் சொல்கிறார்.

1972 இல் புதிய அரசமைப்பொன்றை உருவாக்கிக்கிறது சிறிமாவின் அரசு.அந்த அரசமைப்பு 72இல் இருந்து நடைமுறைக்கு வருவதால் அதில் இருந்து ஐந்து வருடங்களின் பின்தான் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றொரு புதிய விளக்கத்தைக் கொடுக்கிறார் சிறிமா.

இது முழுமையான ஜனநாயக விரோத செயல் என்பதால் இதை மக்களும் எதிர்க்கிறார்கள்.எதிர்க்கட்சிகளும் எதிர்க்கின்றன.

இந்த நிலையில்தான் ஜே.ஆர். முக்கியமான முடிவொன்றை எடுக்கிறார்.

75 இல் எந்தத் தினத்தில் நாடாளுமன்ற ஆயுட் காலம் முடிவுக்கு வருகிறதோ அந்தத் தினத்தில் இருந்து ஒரு நாளும் தான் எம்பியாக இருப்பதில்லை என்று முடிவெடுக்கிறார்.

அதன்படி,ஆயுட் காலம் முடிந்து மறுநாளே எம்பி பதவியை இராஜினாமா செய்கிறார்.ஆனால்,சிறிமாவின் முடிவின்படி நாடாளுமன்றம் அப்படியே பயணிக்கிறது. 77 வரை...

ஜே.ஆர் .இராஜினாமா செய்ததும் அந்தத் தொகுதிக்கு இடைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.அப்போதைய அரசமைப்பின்படி ஒருவர் எம்பி பதவியை இராஜினாமா செய்தால் அல்லது இறந்தால் அந்த எம்பியின் தொகுதிக்கு இடைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.இந்தியாவில் இருப்பதுபோல்...

அதன்படியே ஜே.ஆரின் களனி தொகுதிக்கு இடைத் தேர்தல் நடப்படுகிறது.அதில் ஜே.ஆர் போட்டியிடுகிறார்.அமோக வெற்றியடைகிறார்.

அதாவது,சிறிமாவின் தீர்மானம் பிழை என்பதை மக்கள் சுட்டிக்காட்டுவதாக அமைந்திருந்தது ஜே.ஆரின் வெற்றி.

இதனைத் தொடர்ந்து 1977 இல் நாடாளுமன்றத் தேர்தல்.அதில் ஜே. ஆர். தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அமோக வெற்றி 168 மொத்த ஆசனங்களில் 140 ஆசனங்களை ஐக்கிய தேசிய கட்சி பெறுகிறது.

வெறும் 8 ஆசனங்களை மாத்திரம்தான் சிறிமா  தலைமையிலான சிறிலங்கா சுதந்திர கட்சி பெறுகிறது.

சுதந்திர கட்சி பிரதான எதிர்கட்சியாகக் கூட வரவில்லை.18 ஆசனங்களை பெற்று தமிழர் விடுதலைக் கூட்டணிதான் பிரதான எதிர்கட்சியாகத் தெரிவாகிறது.கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கம்தான் எதிர்கட்சித் தலைவர்.

1970 ஆம் ஆண்டு தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களை பெற்ற சுதந்திர கட்சி 77 ஆம் ஆண்டு தேர்தலில் வெறும் 8 ஆசனங்களை மாத்திரம் பெறுவதற்கு காரணம் அப்போதைய பொருளாதார நிலைமை மற்றும் சிறிமா தேர்தலை 2 வாருடங்களுக்கு நீடித்தமைஅதற்கு எதிரான எதிர்க்கட்சிகளின் பிரசாரம்.

## சிறிமாவை மிஞ்சிய ஜே.ஆர்

இவ்வாறு பெரும் ஜனநாயகவாதியாகக் காட்டிக்கொண்டு ஆட்சியைப் பிடித்த ஜே.ஆர் கூட அவரது ஆட்சியில் அதே வேலையைத்தான் செய்கிறார்.

77 இல் தேர்தல் இடம்பெறுகிறது.அடுத்த தேர்தல் 1983 இல் இடம்பெற வேண்டும். ஆனால்,மேலும் 6 வருடங்களுக்கு நாடாளுமன்றத்தின் ஆயுட் காலத்தை நீடிப்பதற்கு முடிவெடுக்கிறார் ஜே.ஆர்.

1982 இல் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி-அதில் வெற்றி பெற்று 6 வருடங்களுக்கு நாடாளுமன்த்தின் ஆயுட்காலத்தை நீடிக்கிறார்.அதன் படி அடுத்த தேர்தல் 1989 இல்.

சிறிமா மேலதிகமாக 2 வருடங்களுக்கு நாடாளுமன்றத்தின் ஆயுட்காலத்தை அதிகரித்தமைக்கு இவ்வளவு கூத்துக் காட்டிய ஜே.ஆர்.அவரது ஆட்சியில் 6 வருடங்கள் நீடிக்கிறார்.

இவர் தற்போதைய ஜனாதிபதி ரணிலின் மாமா.

## சந்திரிகாவை வீழ்த்திய ரணில்

அடுத்த சம்பவம் சந்திரிகாவின் ஆட்சியில்...

1994 இல் ஜனாதிபதியாகிறார் சந்திரிக்கா அம்மையார்.அடுத்த தேர்தல் 2000 ஆம் ஆண்டு.ஆனால்,சில காரணங்களால் ஒரு வருடத்துக்கு முன்னதாக 1999 இல் தேர்தலை நடத்துகிறார் சந்திரிகா.

அந்தத் தேர்தலில் வெற்றி பெற்று 1999 நவம்பர் மாதம் இரண்டாவது தடவையும் ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்கிறார்.

2003 இல் புதுப் புரளி ஒன்றைக் கிளப்பிவிடுகிறார் சந்திரிக்கா.

தான் 2000ஆம் ஆண்டு டிசம்பரில்தான் அப்போதைய பிரதம நீதியரசர் சரத் என் சில்வா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டேன்.

ஆகவே, அன்றில் இருந்துதான் எனது பதவி காலம் ஆரம்பமாகிறது.அதன் அடிப்படையில் 2006ஆம் ஆண்டே அடுத்த  ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் என்று சொல்கிறார்.

இதை ஏற்கவில்லை ஐக்கிய தேசிய கட்சி. அப்போது நாடாளுமன்ற ஆட்சி ஐக்கிய தேசிய கட்சியிடம்.ரணில் விக்ரமசிங்க பிரதமர். சந்திரிகா ஜனாதிபதி.

சந்திரிக்காவின் விளக்கத்தை-நிலைப்பாட்டை ஏற்க மறுத்து போராட்டங்களை நடத்துகிறது ஐக்கிய தேசிய கட்சி.2005யில்தான் தேர்தலை நடத்த வேண்டும் என்று பிடிவாதமாக நிற்கிறார் ரணில்.

இந்த விவகாரம் நீதிமன்றம் செல்கிறது. நீதிமன்றத்தின் தீர்ப்பு 2005 நவம்பரின் பின் சந்திரிகாவின் இரண்டாவது பதவிக் காலம் முடிகிறது என்பதே.

2000 ஆம் ஆண்டு ரகசியமாக செய்துகொள்ளப்பட்ட சத்யபிரமானத்தை நீதிமன்றம் ஏற்கவில்லை.

அதன் அடிப்படையில் 2005 இல் தேர்தல் இடம்பெறுகிறது.மஹிந்த ராஜபக்ஸ வெற்றி பெறுகிறார்.ஜனாதிபதியாகிறார்.

## ரணிலின் ஜனநாயகம்

ஜனநாயகம் ஜனநாயகம் என்று கூறி சந்திரிகாவின் அந்த முடிவை எதிர்த்தவர் ரணில்.ஆனால்,இன்று  உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தவிடாமல் தடுத்து அதே ஜனநாயக மீறலைச் செய்கிறார்.

ரணிலுக்கு வந்தால் இரத்தம்... சந்திரிகாவுக்கு வந்தால் தக்காளி சட்னி...

தனது மாமா ஜே.ஆர்.எதைச் செய்தாரோ.. அதே வேலையைத்தான் செய்கிறார் மருமகனும்...

– ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக் –

# ஆட்சியைப் பிடிப்போம்



**தேர்தலைப் பெறுவதற்கான உங்களது போராட்டம் எந்தக் கட்டத்தில் உள்ளது?**

**அரசு மேற்கொள்ளும் சில நடவடிக்கைகளால் நாடு சாதாரண நிலைமைக்குத் திரும்பி முன்னேறிவிடும்போல் தெரிகிறதே?**

**நாட்டை முன்னேற்றுவதற்கு நீங்கள் வைத்திருக்கும் திட்டம் என்ன?**

**ஊழல், மோசடிக்கு காரணம் ராஜபக்சக்கள் என்று குற்றஞ்சாட்டி வருகிறீர்கள். வரலாற்றில் அதற்கான பாதையை அமைத்துக் கொடுத்தது நீங்கள் அல்லவா?**

**இனி எந்தக் கட்சியுடன் இணைந்து அரசியல் செய்யப்போகிறீர்கள்?**

**இந்தப் பொருளாதார பிரச்சினையின்போது உங்களின் ஆட்சி இருந்திருந்தால்...?**

> ரணில் விக்ரமசிங்க புலிகளுடன் ஒப்பந்தம் செய்து நாட்டைப் பிரிப்பதற்கு தயாரானபோது அதைத் தோற்கடிப்பதற்காகவே நாம் மஹிந்தவை ஜனாதிபதியாக்கினோம். ஆனால்,மஹிந்த திருடத் தொடங்கினார். அதற்கு எதிராகவும் நாம் போராடினோம். பின்னர் அவரைத் தோற்கடிப்பதற்காகக் களமிறங்கினோம்.

இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கியுள்ளார் ஜேவிபியின் பொது செயலாளர் ரில்வின் சில்வா.அவரது பேட்டியின் முழு விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி : தேர்தலைப் பெறுவதற்கான உங்களது போராட்டம் எந்தக் கட்டத்தில் உள்ளது?**

பதில் :போராட்டத்தில் நாம் இன்னும் உள்ளோம்.நீதிமன்றில் 2 வழக்குகள் தாக்கல் செய்துள்ளோம்.இதற்கு மேலதிகமாக தேர்தலை வேண்டி நிற்கும் சக்திகளை நாம் ஒன்று சேர்த்து வருகிறோம்.

இது தொடர்பில் வெளிநாட்டுத் தூ துவர்களைத் தெளிவுபடுத்தி வருகிறோம்.

போராட்டத்தில் பல்வேறு வடிவங்கள் உள்ளன.அந்த வடிவங்களை நாம் பயன்படுத்தி வருகிறோம்.

**கேள்வி : அரசு மேற்கொள்ளும் சில நடவடிக்கைகளால் நாடு சாதாரண நிலைமைக்குத் திரும்பி முன்னேறிவிடும்போல் தெரிகிறதே?**

பதில் : நாட்டின் உண்மை நிலை தெரிந்தவர்கள் அறிவார்கள் நாடு மேலும் பின்னோக்கிச் செல்லப்போகிறது என்று.இருப்பதைவிட பெரிய பிரச்சினைகள் வரப்போகின்றன.இதுவொரு இடைவேளை.

கடனை அடைப்பதற்கு மேலும் கடன் வாங்குதல்,அரச நிறுவனங்களை விற்றுக் கடனை அடைத்தல் போன்றவை நாட்டை முன்னேற்றுவதற்கு உதவாது.

இருக்கின்ற கடைசி சொத்தையும் விற்று கடன் வாங்கும் இடம்தான் ஐஅக.இப்போது அங்கும் கடன் வாங்கிவிட்டார்கள்.அதற்கு அப்பால் என்ன செய்வது?

ஒரு டொலரையாவது மேலதிகமாக சம்பாதிப்பதற்கான வேலைத்திட்டம் அரசிடம் இல்லை.அரச நிறுவனங்களை விற்று பணம் தேடும் நிலைப்பாட்டில் மட்டும்தான் அரசு ஈடுபட்டுள்ளது.அது மட்டும்தான் அரசிடம் இருக்கும் ஒரேயொரு திட்டம்.

இனி கடன் எடுப்பதற்கு இடமுமில்லை. விற்பதற்கு பொருளுமில்லை.நாடு முன்னேறுவதற்கு வாய்ப்பில்லை.மேலும் அழிவை நோக்கியே நாடு செல்கிறது.

மக்களின் நுகர்வு குறைந்துள்ளது. இதனால் பொருட்களின் இறக்குமதி குறைந்துள்ளது.இதனால் கொஞ்சம் டொலர் மிஞ்சியுள்ளது.

இதை வைத்துக்கொண்டு நாடு நல்ல நிலைமையை அடைந்துள்ளது என்று சொல்ல முடியுமா? இப்படியே நாட்டைக் கொண்டு செல்ல முடியுமா?

மக்கள் விரும்பிய பொருட்களை விரும்பியவாறு வாங்க முடியாமல் பயந்து பயந்து வாங்குவது பொருளாதார முன்னேற்றமா?

சாப்பாடு பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதால் அதன் கொள்வனவு குறைந்துள்ளது. மக்கள் சாப்பிடுவதைக் குறைத்துள்ளனர்.

எரிபொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதாலும் கோட்டா முறையின்கீழ் எரிபொருள் வழங்கப்படுவதால் மக்கள் தேவையான அளவு மாத்திரமே வாங்குகின்றனர்.

சுற்றுலா செல்வதில்லை,தூர இடங்களுக்குச் செல்வதில்லை.இதனால் பெற்றோல் வரிசை இல்லை.

இதெல்லாம் மேலோட்டமாகப் பார்க்கும்போது நிலைமை சரி வந்துவிட்டதுபோல் தெரிகிறது.

**கேள்வி : நாட்டை முன்னேற்றுவதற்கு நீங்கள் வைத்திருக்கும் திட்டம் என்ன?**

பதில் : பல சந்தர்ப்பங்களில் எமது வேலைத்திட்டங்களை தெளிவுபடுத்தியுள்ளோம்.பிரச்சினை எப்படி உருவானது என்று தேடினால்தான் பிரச்சினைக்குத் தீர்வைக் காணலாம்.

பல காரணங்கள் உண்டு.அவற்றுள் பிரதான காரணங்கள் இரண்டு உள்ளன. அதில் ஒன்று உள்ளூர் உற்பத்தி பொருளாதற்கு பதிலாக கடன் பொருளாதாரத்தைப் பின்பற்றி வருகின்றமை.

இரண்டாவது இருக்கின்ற சிறிய பொருளாதாரம்கூட ஊழல்,மோசடி காரணமாக அழிந்து போகின்றமை.

இதற்குத் தீர்வாக உடனடியாக உற்பத்தி பொருளாதாரத்திற்குச் செல்ல வேண்டும். அதன்மூலம் ஏற்றுமதி செய்து டொலரை ஈட்ட வேண்டும்.

அடுத்து ஊழல்,மோசடியை உடன் நிறுத்த வேண்டும்.

இதை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட பாரிய வேலைத்திட்டம் எம்மிடம் உண்டு.

நாம் துன்பப்பட வேண்டிய நாடு அல்ல. நாம் சொத்துக்களில்-மனித வளங்களில் பணக்கார நாடு.

**கேள்வி : ஊழல்.மோசடிக்கு காரணம் ராஜபக்சக்கள் என்று குற்றஞ்சாட்டி வருகிறீர்கள்.வரலாற்றில் அதற்கான பாதையை அமைத்துக் கொடுத்தது நீங்கள் அல்லவா?**

பதில் : மஹிந்தவை 2005 இல் நாம் ஜனாதிபதியாக்கியதும் அவர் பின்னர் திருடியதும் ஒரே விடயம் அல்ல.வேறு வேறு விடயம்.

நாம் மஹிந்தவை ஜனாதிபதியாக்கியது திருடுவதற்கு என்றால் அதை நாம் பாரமேற்போம்.ரணில் விக்ரமசிங்க புலிகளுடன் ஒப்பந்தம் செய்து நாட்டைப் பிரிப்பதற்கு தயாரானபோது அதைத் தோற்கடிப்பதற்காகவே நாம் மஹிந்தவை ஜனாதிபதியாக்கினோம்.

ஆனால், அவர் திருடத் தொடங்கினார். அதற்கு எதிராகவும் நாம் போராடினோம். பின்னர் அவரைத் தோற்கடிப்பதற்காகக் களமிறங்கினோம்.

77 இற்கு பிறகு ஆட்சிக்கு வந்த எல்லா அரசுகளும் ஊழல்.மோசடிகளை செய்தே உள்ளது.

**கேள்வி : இனி எந்தக் கட்சியுடன் இணைந்து அரசியல் செய்யப்போகிறீர்கள்?**

பதில் : இரண்டு பிரதான கட்சிகளின் வேலைதிட்டத்துக்கு எதிரான விசாலமான வேலைத் திட்டம் தேவை என்பதால் நாம் தேசிய மக்கள் சக்தியை உருவாக்கியுள்ளோம்.

அடுத்து ஆட்சியை அமைக்கும் திட்டத்தில் நாம் இருப்பதால் இந்த பிரதான கட்சிகள் எவற்றுடனும் நாம் சேரப்போவதில்லை.

பிரதான இரண்டு கட்சிகளும் தேவை இல்லை என்ற நிலைப்பாட்டுக்கு மக்கள் வந்துவிட்டனர்.எமது கட்சியை ஆட்சிக்கு கொண்டுவரும் நிலைப்பாட்டில் மக்கள் உள்ளனர்.


இதனால்தான் அரசு தேர்தலை நடத்தாமல் இழுத்தடிக்கிறது.எதிர்காலத்தில் ஆட்சியைப் பிடிப்போம் என்ற நம்பிக்கை எமக்குண்டு

**கேள்வி: இந்தப் பொருளாதார பிரச்சினையின்போது உங்களின் ஆட்சி இருந்திருந்தால்...?**

பதில் : கடன் வழங்கிய நாடுகளுடன் பேசி கடன் செலுத்துவதை சற்று பின்னுக்குப் போட்டு கொஞ்சம் கடனை பெற்றுக்கொண்டு டொலர் சம்பாதிக்கும் உற்பத்தி பொருளாதாரத்திற்குச் சென்றிருப்போம்.

சீனாவும் இந்தியாவும் கடன் தருவதற்கு இருந்தது.இலங்கை வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது என்று அறிவித்ததால் அந்தக் கடனைப் பெற முடியாமல் போனது.என்றார்.

# மஹிந்தவால் பிறந்த நாள் பார்ட்டியில் அதிர்ச்சி



இந்த மாதம் 6ஆம் திகதி இரவு கொழும்பு -07 இல் அமைந்துள்ள ஒரு உணவகத்துக்கு தனது நண்பர்கள் சகிதம் இரவு விருந்து ஒன்றுக்குச் சென்றார் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ.

அப்போது அவரது பாதுகாப்பு பிரிவின் அதிகாரி நெவில் வன்னியாராய்ச்சி மஹிந்தவிடம் வந்து தகவல் ஒன்றை கூறினார்.

அது என்னவென்றால் ,ஹோட்டலின் அடுத்த அறையில் பிறந்த நாள் பார்ட்டி ஒன்று இடம்பெறுகிறது.மஹிந்த ஹோட்டலுக்கு வந்ததைக் கண்ட இளைஞர்கள் மஹிந்தவை வந்து அந்த பார்ட்டியில் கலந்துகொள்ள வருமாறும் கேக்கை வெட்டுமாறும் அந்த பாதுகாப்பு அதிகாரியிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டனர்.

இந்தத் தகவலைத்தான் அவர் மஹிந்தவுடன் கூறினார்.மஹிந்த அந்த அழைப்பை சந்தோசமாக ஏற்றுக்கொண்டு அந்த நிகழ்வில் போய் கலந்துகொண்டார்.

அந்த இளைஞ்சர்களுக்கோ மட்டற்ற மகிழ்ச்சி.மஹிந்தவுக்கு கேக் ஊட்டி அவருடன் செல்பி எடுத்து கொண்டாடினர் அந்த பிறந்த நாளை.

இது அந்த இளைஞர்களுக்கு மஹிந்த வழங்கிய திடீர் பிறந்த நாள் பரிசு என்று கூறினர் அந்த இளைஞர்கள்.

# சஜித்துக்கு டிமிக்கி கொடுத்த தலதா



ஐக்கிய மக்கள் சக்தியின் எம்பிக்களுக்கான இரவு விருந்து உபசாரம் ஒன்று தலவதுகொடவில் உள்ள ஹோட்டல் ஒன்றில் ஏப்ரல் 4 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த நிகழ்வுக்கு எல்லா எம்பிக்களும் வரவில்லை.சுமார் 25 பேரளவில்தான் வந்திருந்தனர்.

சஜித் தரப்பு ஒவ்வொருவரையும் தனிப்பட்ட முறையில் அணுகி அழைப்பு விடுத்தனர்.

அதில் ரோகினி கவிரத்னவும் தலதா அத்துகோரளவும் டிமிக்கி கொடுத்துக்கொண்டிருந்தனர்.

எப்படியோ ரோஹிணியை தூக்கிக்கொண்டு வந்துவிட்டனர் சஜித்தின் ஆட்கள்.

தலதாவை ட்ரை பண்ணியபோது தனக்கு கடுமையான சுகவீனம் என்று கூறி மறுத்துவிட்டார்.

இவ்வாறு பல்வேறு காரணங்கள் சொல்லி பல் எம்பிக்கள் மறுத்துவிட்டனர்.

எம்பிக்கள் அரசு பக்கம் தாவுவதைத் தடுப்பதற்காகவே இந்தக் கூட்டம் நடத்தப்பட்டதாம்.

அப்படியென்றால் வர மறுத்தவர்கள் எல்லோரும் பாயப்போகிறவர்களோ...?

## துப்பறிவாளன்


# கடும் கவலையில் மொட்டு எம்பிக்கள்

மொட்டு கட்சி எம்பிக்கள் பலர் தமக்கு அமைச்சுப் பதவி கிடைக்கும் கிடைக்கும் என்று எதிர்பார்த்து எதிர்பார்த்து சோர்ந்து போய்விட்டார்கள் பாவம்.

இன்று கிடைக்கும், நாளை கிடைக்கும் என்று நம்பி இருந்தார்கள்.கிடைப்பதாகவே இல்லை.ஜனாதிபதி இழுத்தடித்துக்கொண்டே செல்கிறார்.

இப்போது அவர்கள் நம்பிக்கையை இழந் து கடும் கவலையில் உள்ளார்களாம்.

இனி மொட்டு கட்சி கூட்டத்திலோ-அரச எம்பிக்களின் கூட்டத்திலோ கலந்துகொள்வதில்லை என்று அவர்கள் தீர்மானித்துள்ளார்களாம்.






# பறிபோகிறது அந்த அமைச்சு

விரைவில் அமைச்சரவை மாற்றம் ஒன்று இடம்பெறவுள்ளது.ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து அரசில் இணையும் எம்பிக்களுக்கும் மொட்டு கட்சியில் உள்ள சிலருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள் ளன.

இதற்காக தற்போது இருக்கின்ற அமைச்சர்களிடம் இருந்து மேலதிக அமைச்சுக்கள் பறிக்கப்படவுள்ளன.

ஹரீன் பெர்னாண்டோ காணி மற்றும் சுற்றுலா துறை அமைச்சராக உள்ளார். அவரிடம் இருந்து காணி அமைச்சு பறிக்கப்படவுள்ளது. ஹரீனும் அதற்கு இணக்கம் தெரிவித்துள்ளாராம்.



# ஜனாதிபதியால் யுவதிக்கு...



அனுராதபுரம் சிறி மஹாபோதியில் வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவதற்காக அண்மையில் அங்கு சென்றிருந்தார் ஜனாதிபதி.

அப்போது அங்கு வந்த ஒரு யுவதி எடுத்த எடுப்பில் """ சேர்..நான் உங்களோட வேல செய்ய விரும்புறேன்...""" என்றார்.

அவரை அடையாளம் கண்டுகொண்ட ஜனாதிபதி.

"ஆ..நான் போனமுறை வந்தப்போ என்னோட செல்பி எடுத்த பிள்ளை அல்லவா நீங்க..""" என்று கூறிய ஜனாதிபதி அருகில் நின்ற சாகல ரத்நாயக்கவை பார்த்து """ இந்த புள்ளய ஜனாபதிபதி செயலகத்துல வேலைக்கு போடுங்க..""""" என்றார்..

எடுத்த எடுப்பில் வெறி சிம்பிளாக அந்த யுவதிக்கு வேலை வாய்ப்பை வழங்கிவிட்டார் ஜனாதிபதி.

அங்கிருந்த எல்லோரையும் புல்லரிக்க வைத்தது.

' சேர்..அப்டித்தான்.வித்தியாசமான ஆள்..""என்றார்கள் அங்கு நின்ற ஜனாதிபதியுடன் வேலை செய்யும் ஊழியர்கள்.

# பௌசி ஹெலிகொப்டரில் ஏறுவாரோ...?

கொம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் வைத்தியர் ஜீ.வீரசிங்கவின் மகளின் திருமணம் கடந்த வாரம் கொழும்பு சங்கிரில்லா ஹோட்டலில் நடைபெற்றது.

அரசியல்வாதிகள் என்று ஹெலிகொப்டரில் கூட்டணி சேர்ந்துள்ள கட்சி பிரமுகர்கள் மாத்திரமே அதற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களுக்கு மேலதிகமாக வந்த அரசியல்வாதி என்றால் அண்மையில் எம்பியான ஏ.எச்.எம்.பௌஸிதான்.

இவரைப் பார்த்தவர்கள் """என்ன..பௌஸி ஹெலிகொப்டரில் ஏறப் போகிறாரோ..? என்று கேள்வி எழுப்பினர்.

இல்லை..அவர் ஜீ.வீரசிங்கவின் மிக நெருங்கிய நண்பர் என்று அங்கிருந்த விவரம் அறிந்த சிலர் கூறினர்.


நீங்கள் அரசியலில் அங்கும் இங்கும் பாய்வது ஏன்?

இலங்கையின் எதிர்கால அரசியல் எப்படி அமையப்போகிறது?

ஷாபிக்கு எதிரான கருத்தை நாடுபூராகவும் எடுத்துச் சென்றவர் நீங்கள்தானே?

கோத்தாபாயவை ஆட்சிக்கு கொண்டுவருவதற்கு நீங்கள் எடுத்த தீர்மானம் பிழை என்று இப்போது நினைக்கிறீர்களா?

அரசுடன் இணையும் திட்டம் ஏதும் உண்டா?



# அடுத்த ஜனாதிபதியைத் தீர்மானிப்பது நாமே..

# ராஜபக்ஸ குடும்பம் இனி ஆட்சிக்கு வராது...

## நான் மலட்டுதன்மை ஏற்படுத்தும் ரொட்டிபற்றியோ ,மலட்டுத்தன்மை ஏற்படுத்தும் கொத்து ரொட்டிபற்றியோ பேசவில்லை முஸ்லிம்களுக்கு எதிராக இனவாதத்தைத் தூண்டவில்லை. பயங்கரவாதிகளுக்கு எதிராகவே வேலை செய்தேன்.

இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தின தேரர். அவரது முழுமையான பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி : தற்போதைய அரசியல் நிலைமை பற்றி உங்களது நிலைப்பாடு என்ன?**

பதில் : புதிய மாற்றம் தேவை. மக்களின் பிரச்சினைகளை செவிமடுக்கும் தலைமைத்துவம் ஒன்று தேவை.இது வறுமையடைய வேண்டிய நாடு அல்ல.

நல்ல திறமையான தலைவர் இருந்தால் இரண்டு வருடங்களுக்குள் எல்லா பிரச்சினையையும் தீர்க்க முடியும்.இது 10 வருடங்கள் இழுத்துச் செல்ல வேண்டிய பிரச்சினை அல்ல.

எம்மிடம் இருக்கின்ற வளங்களை பயன்படுத்தி இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்க்க முடியும்.

**கேள்வி : குறிப்பிட்ட சில மாதங்களுக்குள் ரணில் விக்ரமசிங்க இந்தப் பிரச்சினையை தீர்த்துள்ளார் அல்லவா?**

பதில் : ரணில் ஏனையவர்களைவிட மற்றவர்களின் கருத்துக்களை செவிமடுக்கக்கூடியவர். ஆனால்,அவருக்கென்று ஒரு திட்டம் ஒன்று. அவர் அதையே செய்வார்.

அவர் நினைத்ததையே செய்பவர்.பொது இணக்கப்பாட்டின் கீழ் வேலை செய்பவர் அல்ல.

மத்திய வங்கியை சுயாதீனமாக்குவதற்கான சட்டமூலம்,பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் எல்லாம் அவர் தான்தோன்றித்தனமாகக் கொண்டு வருவது.இதற்கு மக்களின் இணக்கம் கிடையாது.

நாட்டை பிரிப்பதுபோன்ற பயங்கரவாதம் இப்போது நாட்டில் இல்லை.இருப்பது சிவில் பிரச்சினை.அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ,பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தேவை இல்லை.இது மக்களோடு மோதும் விடயம்.

இவற்றையெல்லாம் அவர் கைவிட வேண்டும்.

சிக்கலான நேரத்தில் நாட்டை பாரமேற்று உடனடியாக வழமையான நிலைமையைக் கொண்டு வந்தார் ரணில்.அதற்கான கௌரவத்தை அவருக்கு கொடுக்க வேண்டும்.

**கேள்வி : இந்த நேரத்தில் நாட்டை நிர்வகிக்கக்கூடிய சிறந்த தலைவர் யார்?**

பதில் : என்னால் அப்படியான ஒருவரைக் காண முடியவில்லை.

**கேள்வி : நீங்கள் அரசியலில் அங்கும் இங்கும் பாய்வது ஏன்?**

பதில் : நான் எனது கொள்கையை அடிக்கடி மாற்றுபவன் அல்ல. நான் அரசியலைத் தொடங்கியது ஜேவிபியில்தான்.

88 தேர்தலை ஜேவிபி நிராகரித்ததும் நான் ஜேவிபிக்கு எதிராக மாறிவிட்டேன். நான் பதவிகளுக்காக -அமைச்சுப் பதவிகளுக்காக கட்சி மாறியது கிடையாது.

2015 ஆட்சி மாற்றத்துக்கு நான் மிகவும் பங்காற்றினேன்.நாம் ஜனாதிபதியாக்கியது மைத்திரியை.அவரது கொள்கையின் காரணமாக அவருடன் என்னால் தொடர்ந்து பணியாற்ற முடியவில்லை.

அரசுக்குள் இருந்துகொண்டே நான் அஉஉ ஒப்பந்தத்தை எதிர்த்தேன்.எனக்கு கொள்கையே முக்கியம்.கட்சி அல்ல.

**கேள்வி : இலங்கையின் எதிர்கால அரசியல் எப்படி அமையப்போகிறது?**

பதில் : அடுத்த ஜனாதிபதியை தீர்மானிக்கப்போவது நாமே.இனிமேல் ஒருபோதும் ராஜபக்ஸ குடும்பத்தால் ஆட்சிக்கு வர முடியாது.அந்தளவுக்கு நாடு வீழ்ந்துள்ளது.

அவர்கள் இனி 20 வீதத்துக்கும் குறைவான வாக்கு மட்டத்தில்தான் இனி இருப்பார்கள்.அவர்களது அரசியல் ஆதிக்கம் முடிந்துவிட்டது.

அவர்களால் அரசியலில் அழுத்தம் மாத்திரம் கொடுக்க முடியும்.தலைவர்களாக மாற முடியாது.

சஜித்தை எடுத்துக்கொண்டால் சவாலை ஏற்றுக்கொள்ளும் திறமை அவரில் இல்லை.

அடுத்த ஆட்சி மலரப்போவது இவர்களுக்கு வெளியே இருந்து.

நாட்டுப்பற்று சரியாக சிந்திக்கக்கூடிய எல்லா தரப்பினரையும் நான் ஒன்றிணைத்து வைத்துள்ளேன்.பெரிய ஒன்றே என்னிடம் உள்ளது.

அடுத்த ஜனாதிபதி தேர்தலின்போது நாம் அதற்குள் நுழைவோம்.எந்த அடிப்படையில் என்று கேட்க வேண்டாம்.அடுத்த ஜனாதிபதியைத் தீர்மானிக்கும் சக்தியாக நாமே இருப்போம்.

இனி விஜபிக்களை அடிப்படையாகக் கொண்ட அரசியல் பக்கம்-கட்சியின் பக்கம் நான் செல்லமாட்டோம்.பாரம்பரிய அரசியல் கட்சிகளுக்கு வெளியேதான் எமது அரசியல் இப்போது உள்ளது.

ரணில் எமது பேச்சை கேட்பதற்குத் தயார் என்றால் அவருடன் வேலை செய்வதற்கு நாம் தயார்.

**கேள்வி : ஷாபி ஷிஹாப்தீனின் பிரச்சினை பற்றி...?**

பதில் : அது நான் உருவாக்கிய பிரச்சினை அல்ல.குருநாகல் பொது வைத்தியசாலையில் 900 தாய்மார்கள் வாக்குமூலம் அளித்துள்ளார்கள்.அவர்களுள் சிலருக்கு இப்போது குழந்தை கிடைத்துள்ளது.75 வீதமானவர்களுக்கு குழந்தை கிடைக்கவில்லை.

நீதிமன்றில் வழக்குள்ளது.அவர் வழக்கில் இருந்து விடுதலையாகவில்லை.இரண்டு மாதங்களுக்கு முன் விசாரித்துப் பார்த்தேன். அந்த வழக்கு இன்னும் அப்படியே உள்ளது.

**கேள்வி : ஷாபிக்கு எதிரான கருத்தை நாடுபூராகவும் எடுத்துச் சென்றவர் நீங்கள்தானே?**

பதில் : தாய்மார்கள் சாட்சி வழங்கியதால் இந்த வழக்கை அரசியல் தலையீடு இல்லாமல் கொண்டு செல்ல வேண்டும் என்று மட்டுமே நான் கூறினேன்.இதைத்தவிர வேறு எதையும் நான் கூறவில்லை.

நான் மலட்டுதன்மை ஏற்படுத்தும் ரொட்டி,மலட்டுத்தன்மை ஏற்படுத்தும் கொத்து ரொட்டிபற்றி பேசவில்லை அக்குரணைக்குக்கு சென்று-பேருவளைக்குச் சென்று இனவாதத்தைத் தூண்டவில்லை.

நான் ஒருபோதும் இனவாதத்தைத் தூண்டியதில்லை.பயங்கரவாதிகளுக்கு எதிராகவே வேலை செய்தேன்.

**கேள்வி : கோத்தாபாயவை ஆட்சிக்கு கொண்டுவருவதற்கு பாடுபட்டவர்கள் நீங்கள் அல்லவா?**

பதில் : ஆம்.அவரின் தான்தோன்றித்தனம்-குடும்பத் தலையீடு காரணமாக நாடு இந்த நிலைக்குச் சென்றது.

கோத்தாபய போன்ற பலவீனமான ஒருவரை ஆட்சிக்குக் கொண்டு வந்தது பிழை என்பதை இப்போது உணர்கிறேன்.

இயற்கை விவசாய கருத்திட்டத்தைக் கொண்டு வந்தது நான்தான். ஆனால்,அதை 24 மணி நேரத்துக்குள் நடைமுறைப்படுத்துமாறு நான் கூறவில்லை.ஆனால்,கோத்தா அதை உடனடியாக நடைமுறைப்படுத்த போய்த்தான் இவ்வளவு பிரச்சினையும்.

அது தொடர்பில் எனது கருத்துக்களை சொல்வதற்கும் இடம் தரவில்லை அவர்.

**கேள்வி : அரசுடன் இணையும் திட்டம் ஏதும் உண்டா?**

பதில் : ஒருபோதும் இல்லை.அமைச்சுப் பதவிக்கோ வேறு எந்த சலுகைக்கோ ஆசைப்பட்டு அரசில் இணையமாட்டேன்.

ஜனாதிபதி அவரது கொள்கையைக் காட்டினால்-அது பொருத்தமானதாக இருந்தால் அதற்கு எனது ஆதரவை வழங்குவேன்.

ஏதாவது வேலைத்திட்டத்தை எம்மிடம் ஒப்படைத்தால் அதற்கான நிதியைத் திரட்டி அந்த திட்டத்தை நாம் முடித்துக் கொடுப்போம் .-என்றார்.

# பெருநாளைக்குத் தயார்...


















# முன்னேற்றப் பாதையில் East Star Handlooms...






East Star Handlooms நிறுவனம் 1999 இல் எஸ்.எஸ்.ஏ.காதரால் கல்முனையில் தொடங்கப்பட்டது..2004 இல் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் இந்தத் தொழிலை முற்றாகப் பாதித்தது.

இருந்தாலும்,அவரது மகன் ஏ.சி.ஏ .நியாஸ் அரும் பாடுபட்டு 2012 இல் மீண்டும் இதைத் தொடங்கினார்.இன்று அது முன்னேற்றப் பாதையை அடைந்து அதன் வர்த்தகம் நாட்டின் பல இடங்களில் விஸ்தரிக்கப்பட்டு வெற்றிகரமாக நடைபோடுகிறது.

இருபாலாருக்குமான நவநாகரீக கொட்டன்,சில்க் ஆடைகளை உற்பத்தி செய்து – நாட்டின் பல இடங்களிலும் கால் பதித்துள்ளது.

ஆடைகள் மாத்திரமன்றி கைத்தறி உற்பத்திகளை கொண்டு நகைகள், பைகள் போன்ற பொருட்களையும் உற்பத்தி செய்து வருகிறது.

இந்த கைத்தறி ஆடைத் துறையில் இருப்பவர்கள் ஆரம்பத்தில் சாரன்களை மாத்திரமே உற்பத்தி செய்து வந்தனர். ஆனால் நாம் சாரன்களுக்கு மேலதிகமாக சட்டைகள்,புடவைகள் உள்ளிட்ட எல்லா வகையான ஆடைகளையும் உற்பத்தி செய்து வருகிறோம் என்று நுயளவ ளுவயச உயனெடழழஅள நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான ஏ.சி.ஏ .நியாஸ் தெரிவித்துள்ளார்.

இன்றைய நவநாகரீக தலைமுறையினரின் தேவையும் ரசனையும் வித்தியாசமானவை. அந்தத் தேவையையும் ரசனையையும் முழுமையாக நிறைவேற்றுவதில் இன்று

**இந்த நிறுவனத்தின் இன்னொரு முக்கிய அம்சம் என்னவென்றால் இலங்கையில் மாத்திரமன்றி வெளிநாடுகள் பலவற்றிலும் வாடிக்கை யாளர்களை கொண்டிருப் பதுதான்.சிங்கப்பூர், அவுஸ்திரேலிய மற்றும் கனடா ஆகிய நாடுகளில் அதிகமான வாடிக்கையாளர்கள் உள்ளனர்.**

**East Star Handlooms இன் நேர்த்தியான வடிவமைப்புக்கும் தரத்திற்கும் இவர்கள் என்றென்றும் அடிமை.**


நிறுவுனர் எஸ்.எஸ்.ஏ.காதர்

முன்னணியில் நிற்கிறது நுயளவ ளுவயச உயனெடழழஅள.

இந்த உற்பத்திகளின் பிரதான வடிவமைப்பாளர் ஏ.சி.ஏ.நியாஸின் மனைவி ஐ.எல்.என்.ஹபீல்தான்.

இந்த ஆடைகளின் நிறங்களும் வடிவமைப்பும் எமது நாட்டுக்குப் பொருத்தமானதாகவே அமைந்துள்ளது. வாடிக்கையாளர்களின் தேவை அறிந்து –நாகரீகம் உணர்ந்து அதற்கு ஏற்பவே வடிவமைப்படுகின்றது.

இந்த நிறுவனத்தின் வெற்றியின் ரகசியமே இதுதான்.

நிறுவனத்தின்  உற்பத்திகளும் விநியோகமும்  கல்முனையில் அமைந்துள்ள அதன் தலைமையகத்தில் இருந்தே மேற்கொள்ளப்படுகின்றன.

2018இல் கட்டிமுடிக்கப்பட்ட அழகிய மூன்று மாட்டிக்கட்டத்துலேயே அணைத்து வர்த்தக செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன.

இந்த நிறுவனத்தின் இன்னொரு முக்கிய அம்சம் என்னவென்றால் இலங்கையில் மாத்திரமன்றி வெளிநாடுகள் பலவற்றிலும் வாடிக்கையாளர்களை கொண்டிருப்பதுதான்.

சிங்கப்பூர், அவுஸ்திரேலிய மற்றும் கனடா ஆகிய நாடுகளில் அதிகமான வாடிக்கையாளர்கள் உள்ளனர்.

பல குடும்பங்களுக்கு தொழில் வாய்ப்பாக அமைந்துள்ள இந்த நிறுவனம் சம்பிரதாய கைத்தறி துறையில் இருந்து நவீன கைத்தறி துறைக்குள் நுழைந்து நீண்ட பயணத்தை மேற்கொண்டு இன்று முன்னேற்றகரமான நிலையை அடைந்துள்ளது.

சில்லறை வர்த்தகத்திலும் மொத்த வர்த்தகத்திலும் கொடி கட்டிப் பறக்கும் நுயளவ ளுவயச உயனெடழழஅள அதன் முன்னேற்றப்  பாதையை மேலும் விஸ்தரித்துக்கொண்டே செல்கிறது.







பிரதம நிறைவேற்று அதிகாரி ஏ.சி.ஏ .நியாஸ்




# East Star Handlooms

354B/2, Alayadi North Road
Natpaddimunai - 3, Kalmuani
(+94 67) 222 1374

Sales@Eshandlooms.com
eshandlooms.com

Opening hours:
8am-5pm [closed on Friday, Sunday and Public Holiday]




# AIA இன்ஷூரன்ஸின் Run For Their Lives 2023



தொடர்ச்சியாக மூன்றாவது வருடமாகவும் பெருமைக்குரிய அனுசரனையாளராக நோயாளர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்காக மீண்டும் ஓடியுள்ள AIA!

அபெக்ஷா புற்றுநோய் வைத்தியசாலைக்கு நிதி திரட்டுவதற்காக ரன் போஃ தெயார் லைவ்ஸ் 2023 (Run For Their Lives 2023) திட்டத்தில் பங்குபற்றியதை AIA இன்ஷூரன்ஸ் மகிழ்ச்சியுடனும், பணிவுடனும் தெரிவித்துக் கொள்கின்றது.

இந்த அறக்கட்டளை ஓட்டமானது இலங்கையில் தொற்றா நோய்களைத் தடுப்பதிலும் மற்றும் நிர்வகிப்பதிலும் கவனம் செலுத்தி மக்கள் ஆரோக்கியமாக, நீண்ட ஆயுளுடன், சிறந்த வாழ்க்கையினை வாழ்வதற்கு உதவும் AIA இன் வர்த்தக நாம நோக்குடன் இணைந்துள்ளது. மேலும் இந்நிறுவனம் தொற்றா நோய்களை எதிர்த்துப் போராடுவதற்கான அதன் அர்ப்பணிப்பினைத் தொடர்வதோடு நாட்டிலுள்ள முன்னணி தொற்றா நோய்கள் குறித்தான விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

2030 ஆம் ஆண்டளவில் ஒரு பில்லியன் மக்களின் உயிர்களில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற AIA இன் இலக்குடன் RFTL இன் பங்கேற்பாளர்கள் நோய்களைத் தடுக்கவும், நீண்ட காலத்திற்கு ஆரோக்கியமாக இருக்கவும் உதவும்.



# சிறந்த கொழுந்து பறிப்பாளர்கள் போட்டி

ஹேய்லிஸ் பெருந்தோட்ட நிறுவனம் சிறந்த தேயிலை கொழுந்து பறிப்பாளர் போட்டியை நடத்தியது.

களனி வெலி பெருந்தோட்ட நிறுவனம், தலவாக்கலை பெருந்தோட்ட நிறுவனம் மற்றும் ஹேய்லிஸ் பெருந்தோட்ட நிறுவனத்துக்கு சொந்தமான ஹொரண பெருந்தோட்ட நிறுவனம் ஆகிய தோட்டங்களை சேர்ந்த கொழுந்து பறிப்பாளர்களுக்கிடையில் இப்போட்டி நடைபெற்றது.

தலவாக்கலை பெருந்தோட்ட நிறுவனத்திற்குச் சொந்தமான சமர்செட் தோட்டத்தைச் சேர்ந்த திருமதி ஆர். சீதையம்மா 2023 ஆம் ஆண்டின் சிறந்த தேயிலைக் கொழுந்து பறிப்பாளராக வெற்றிபெற்றார்.

அவர் 20 நிமிடங்களுக்குள் 10.42 கிலோ கொழுந்துகளைப் பறித்து 82.6% என்ற அதிகபட்ச மதிப்பெண்ணுடன் தங்க விருதையும் 300,000 ரூபா பரிசுத் தொகையையும் வென்றார்.

களனிவெளி பெருந்தோட்ட நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பட்ல்கல்ல தோட்டத்தைச் சேர்ந்த எஸ். கோமதி தங்க விருதை வென்றார். அல்டன் தோட்டத்தைச் சேர்ந்த திருமதி எம். விக்னேஸ்வரி ஹொரணை தோட்ட நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தி தங்க விருதை வென்றார். ஹேய்லிஸ் பெருநிறுவனம் தங்கம் விருது பெற்ற அனைவருக்கும் தலா 100,000 ரூபாவும், வெள்ளி விருது பெற்றவர்களுக்கு தலா 75,000 ரூபாவும் மற்றும் வெண்கல விருது வென்ற அனைவருக்கும் தலா 50,000 ரூபாவும் வழங்கியது.

# நாவலப்பிட்டியில HNB FINANCEஇன் தங்கக் கடன் சேவை



HNB FINANCE PLC, நாவலப்பிட்டி அம்பகமுவ வீதி, இல. 32/2 இல் அமைந்துள்ள அதன் நாவலப்பிட்டி கிளையில் தங்கக் கடன் சேவை நிலையம் ஒன்றைத் திறந்துள்ளது.

நிறுவனத்தின் Gold Plan மற்றும் VIP Gold Loan உள்ளிட்ட தங்கக் கடன் சேவைகளில் நாவலப்பிட்டி வாடிக்கையார்கள் இணைவதற்கு புதிய தங்கக் கடன் அலகு வழிவகுக்கிறது.

போட்டி வட்டி விகிதத்தின் கீழான சேவைகள் மற்றும் சலுகைக் கட்டண முறைகள் மூலம் தங்கக் கடனைத் தீர்ப்பதற்குத் தேவையான வசதிகள் போன்றவற்றை இந்தக் தங்க கடன் சேவை வழங்குகிறது.பதிவு கட்டணம், மறைமுக கட்டணம் எதுவும் கிடையாது.

"இந்தப் புதிய நிலையம் ஊடாக எமது நாவலப்பிட்டி வாடிக்கையாளர்களுக்கு தங்கக் கடன் சேவைகள் மற்றும் தொடர்புடைய சேவைகளை பெற்றுக் கொடுக்க முடியும்.

எங்கள் தற்போதைய மற்றும் எதிர்கால வாடிக்கையாளர்களுக்கு உத்தரவாதமான சேவையை வழங்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்." என HNB FINANCE இன் தங்கக் கடன் சேவைகளுக்கான உதவிப் பொது முகாமையாளர் / துறைத் தலைவர் லக்ஷ்மன் ரணசிங்க தெரிவித்தார்.






# சிறந்த ஒலி அனுபவத்தை வழங்கும் Samsung TV

America வில் இருக்கக்கூடிய Samsung Research Audio Lab ஆனது சமீபத்தில் 'Samsung Audio தொழிநுட்பத் தொழில்துறையின் உச்சத்திற்கே கொண்டு செல்வது" என்ற அதன் நீண்ட நாள் கனவை நோக்கிப் பயணிக்கிறது எனத் தெரிவித்தது.

கேட்பதற்கே மிகவும் இனிமையான வுஏ யுரனழை தொழிநுட்பத்தை மேம்படுத்தும் வகையில் Q-Symphony மற்றும் OTS (Object Tracking Sound) உட்பட புதுமையான தீர்வுகள் மூலம் Audio Lab ஆனது முழுத் துறையையும் ஆச்சரியப்படுத்தியுள்ளது.

Samsung இன் QLED TV வரிசையில் அதன் அண்மைக்கால வெளியீடான latest Ultra Slim Soundbars ஏற்கனவே Samsung பிரியர்களைப் பெரு மகிழ்ச்சியில் ஆழ்த்தி யுள்ளது.

Home Audio Dolby Atmos எனப்படும் Audio தொழிநுட்பமானது சேர்க்கப்பட்டுள்ளமையால் Soundbar களுக்குள் மூழ்கி எழும் அனுபவமே மனதிற்கு மிகவும் ரம்யமானது.

Soundbarகளும் இயல்பாகவே TV யின் வடிவமைப்புப் போக்கிற்கு ஏற்றால் போல், மென்மையும், வழுவழுப்புமான மற்றும் நேர்த்தியான, சுருங்கள் கூறின் வீட்டின் அழகிற்கே அழகு சேர்ப்பதுமாய் அது அமைந்துமிருக்கிறது.

இதன் வடிவமானது புதிய ரகத்தில் ஒடுங்கியதாக இருப்பினும், Samsung ஆனது Soundbar இன் தரத்தினை உயர்த்தும் அதன் பயணத்தினைத் தொடர்ந்த வண்ணமே இருக்கும்.

# டயலொக்கிற்கு விருது




2023 SLIM KANTHAR மக்கள் விருது விழாவில், டயலொக் நிறுவனம் தொடர்ச்சியாக 12வது தடவையாகவும் "ஆண்டின் பிரபலமான தொலைத்தொடர்பு வர்த்தக நாமம்" என்ற விருதை வென்றுள்ளது.

இலங்கையர்களின் வாழ்வில் தனித்துவமான தாக்கத்தை ஏற்படுத்திய வர்த்தக நாமங்களை அங்கீகரிக்கும் SLIM KANTHAR மக்கள் விருதுகள், இலங்கை மக்களின் இதயங்களுடன் இணைந்த வர்த்தக நாமங்களுக்கு வழங்கப்படுகின்றன.

இந்த விருதின் மூலம் நாட்டை டிஜிட்டல் மயமாக்கலுக்கு உட்படுத்தும் டயலொக்கின் அர்ப்பணிப்பு மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

"இந்த விருது கிடைத்தமை குறித்து நாம் மகிழ்ச்சியடைகிறோம். இலங்கை மக்களின் வாழ்வில் ஒரு நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்த எம்மால் முடிந்துள்ளதையிட்டு பெருமையடைகிறோம்.

"எதிர்காலம் இன்றே" எனும் எமது தொனிப் பொருளுக்கமைய எங்கள் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்கியமைக்கு சான்றாக இந்த விருது அமைந்துள்ளது. - என்றார்.

டயலொக் குழும பிரதான சந்தைப்படுத்தல் அதிகாரி அமலி நாணாயக்கார.